பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள் எட்டு

விலைரூபா 5-00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 05 வியாழக்கிழமை ( 21-9-2000 ) தொ. பேசி;- 3378 ஒலி: 276

உள்ளே →
க. பொ. த.
சாதாரணதர
மாணவருக்கான
வரலாறும்
சமூகக்கல்வியும்
விடைகள்

★ விடுதலைப்புலிகளுடனான யுத்தம்

# யாழ்ப்பாண குடாநாட்டில் தொடரும்
# தேர்தலும் சுமுகமாக நடாத்தப்படும்!

## பத்திரிகையாளர் மாநாட்டில் யாழ்.தளபதி

(நமது நிருபர்)

**ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலையொட்டி தற்பொழுது புலிகளுடன் நடாத்தி வரும் யுத்தத்தை அரசாங்கம் ஒரு போதும் நிறுத்தமாட்டாது.அதற்கு மாறாக யுத்தம் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.**

**இவ்வாறு பலாலி இராணுவத் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற உள்ளூர், வெளியூர் பத்திரிகையாளர் மாநாட்டில் யாழ். குடா-நாட்டுத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா தெரிவித்திருந்தார்.**

இம்மாநாட்டில் யாழ்குடாநாட்டின் நிலைவரங்களை அறிவதற்குகொழும்பிலிருந்து வந்த உள்ளூர் வெளியூர் செய்தியாளர்கள்பலர் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டில் மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

றிவிகரண (சூரியகதிர்) இராணுவ நடவடிக்கைமூலம் கொழும்புத்துறை, நாவற்குழிப் பகுதியூடாக இராணுவத்தினர் முன்னேறி சாவகச்சேரிப் பகுதியை கைப்பற்றியுள்ளனர்.

விடுதலைப் புலிகளுடன் தற்போது மேற்கொள்ளப்படும் யுத்த நடவடிக்கைகள் ஒரு போதும் நிறுத்தப்படமாட்டாது.

சண்டை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும். இதனால் எதிர்வரும் பொதுத் தேர்தல் எந்த வகையிலும் பாதிக்கப்படமாட்டாது:

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு திரும்பினர்

யாழ். குடா நாட்டில் தென்மராட்சிப் பகுதியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்டிருந்த இராணுவ நடவடிக்கையின் மூலம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து மீட்ட பகுதிகளுக்கு பத்திரிகையாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். யுத்தம் நடைபெற்ற கொழும்புத்துறை, சாவகச்சேரி பகுதிகளுக்கு பத்திரிகையாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டு அங்குள்ள நிலைமைகள் எடுத்துக் காட்டப்பட்டதாக இலங்கை வானொலி (8ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானம் வேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு நிலவரத்தை நேரில் கண்டறிவதற்காக

## புதிய இந்திய தூதுவர்

(கொழும்பு)

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராக பேராசிரியர் சேனகே டயஸ் பண்டாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரது இந்நியமனம் இந்திய அரசின் இணக்கத்துடன் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர் கெலமியா பல்கலைகழகத்தின் துணைவேந்தராக கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ-2)

## சடலங்களை ஒப்படைப்பதில் இன்னமும் முடிவில்லை?

விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்படுவதற்காக ஐ.சி.ஆர்.சியினால்கொண்டு செல்லப்பட்டு மீண்டும் திரும்ப கொண்டு வரப்பட்ட சடலங்கள் யாழ் போதனா வைத்திய சாலையின் பிரேத அறையிலேயே வைக்கப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவை சங்கம் மேற்கொண்டு வரும் முயற்சிகள் வெற்றியளிக்காத நிலையில் சடலங்களை இங்கேயே அடக்கம் செய்வதா என்பது குறித்து ஆராயப்படலாமெனவும் தெரிய வருகிறது. (க-12)

## 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் இன்று புறப்படும்

பருத்தித்துறையில் இருந்து திருமலைக்கு பயணிகளை ஏற்றிச் செல்லும் 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் சேவை இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இக் கப்பலில் பயணம் செய்வதற்குப் பயணச் சீட்டுப் பெற்ற பயணிகள் அனைவரையும் பயண ஆவணங்களுடன் இன்று காலை 7.30 மணிக்கு யாழ். சிங்கள மகா வித்தியாலயத்துக்கு வருகை தருமாறு யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயம் கேட்டுள்ளது. (வ-4)

## சென்னை மாநாட்டில் கலந்து கொள்ள துணைவேந்தருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய பல்கலைக் கழகங்களின் சங்கத்தின் தென் மண்டல துணைவேந்தர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அழைக்கப்பட்டுள்ளார்.

இம் மாநாடு சென்னை இராமச்சந்திரா மருத்துவப் பல்கலைக் கழகத்தில் ஒக்டோபர் மாதப் பிற்பகுதியில் நடைபெறவுள்ளது.

தமிழ் நாடு, கேரளம், கன்னடம், ஆந்திரா, பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களைச்

★ ஐ.தே. கட்சி ஆட்சிக்கு வந்ததும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு நிலவரத்தை நேரில் கண்டறிவதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்த பத்திரிகையாளர்களை பிரத்தியேக பஸ்வண்டி ஒன்றில் பாதுகாப்பு படையினர் யாழ்ப்பாணம் அழைத்து வந்தனர். பலாலி இராணுவத்தலைமையகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டுக்குப்பின் யாழ். செயலகத்தில் அரச அதிபர் சண்முகநாதனைச் சந்தித்து தேர்தல்களவிபரங்களைக் கேட்டறிந்தனர் இதன்பின் யாழ். நகருக்குள்வந்த பத்திரிகையாளர்கள். (8ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

கடந்த 17 ஆம் 18 ஆம் திகதிகளில்சாவகச்சேரிப்பகுதிகளில் இராணுவ நடவடிக்கையின் போது ஏற்பட்ட மோதலில்

★ மேஜர் தமிழ்வாணன் (சின்னவன் குணபாலசிங்கம்) யாழ். மாவட்டம்

★ பிரதீபா (ஸகரத்தினம் சியாமிளா)

(8ஆம் பக்கம் பார்க்க)

## அதிபர் கன்னத்தில் அடித்ததால் மாணவன் கேட்கும்சக்தியை இழந்தான்

### 10 லட்சம்ரூபாநட்டஈடுகோரி வழக்கு

பாடசாலை அதிபர் கன்னத்தில் அடித்ததனால் காதின் செவிப்பறை பாதிக்கப்பட்டு கேட்கும் சக்தியை இழந்த மாணவன் ஒருவன் 10இலட்சம் ரூபா நட்டஈடு கோரி மேன் முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளான்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, ஸ்ரீஜெயவர்த்தனபுரஜனாதிபதிவித்தியாலயத்தில்உயர்தர வர்த்தகப் பிரிவில் கல்வி கற்கும் சாகரபிரியந்தா என்ற மாணவனின் கன்னத் (8ஆம் பக்கம் பார்க்க)

★ ஐ.தே. கட்சி ஆட்சிக்கு வந்ததும்

# ஜனாதிபதி மாளிகைக்கு செலவாகும் பணம் மிச்சப்படுத்தப்படும்!

## ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைத்ததும் தற்போது ஜெயவர்த்தனபுரவில் கட்டப்பட்டு வரும் ஜனாதிபதி மாளிகையின் கட்டட வேலைகளை உடனடியாக நிறுத்துவோம் என்று ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பத்திரிகையாளர் மாநாடொன்றில் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகையாளர் மாநாடு ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இம்மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

ஜனாதிபதி மாளிகைக்குச் (8ஆம் பக்கம் பார்க்க)

டம், ஆந்திரா, பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களைச் (8 ஆம் பக்கம் பார்க்க)

# காலி, களுத்துறை பகுதிகளில் கடும் மழை; வெள்ளப் பெருக்கு

## இரு சிறுவர்கள் பலி; மக்கள் இடம்பெயர்வு

(கொழும்பு)

தென்பகுதியில் கடந்த மூன்று தினங்களாக இடைவிடாது பெய்து வரும் அடைமழையினால் மாத்தறை, காலி மாவட்டங்களில் உள்ள ஆறுகள் பெருக்கு எடுத்து ஓடுவதால் ஆயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்து பாதுகாப்பானஇடங்களுக்குச் சென்றுள்ளனர்.

மாத்தறையில் சுமார் ஐயாயிரம் பேரும் காலியில் 12 ஆயிரம் பேரும் வீடு வாசல்களுக்குள் வெள்ளம் புகுந்தமையால்இடம்பெயர்ந்துள்ளனர்.

கடுமையான மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் 10 வயதும், 8 வயதும் மதிக்கத்தக்க இரண்டு சிறுவர் வெள்ளத்தால் அடித்துச்செல்லப்பட்டுள்ளதாகவும் (8 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



## வலிகாமம் மேற்கு பிரதேசசபை

### ஈழமக்கள் ஜனநாயக கட்சி (ஈ. பி. டி. பி) கையேற்ற பின்பு

# நடைபெற்ற வேலைகள் விபரம் 2000

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம், மக்களால் தெரிவு செய்யப்பட்டு உள்ளூராட்சி சபைகள் மூலம் மக்களின் தேவைகளை அறிந்து சேவைகளை செய்து வருகின்றோம். எமது செயலாளர் நாயகமும் ஒங்கிணைப்பு குழுத்தலைவரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கௌரவ. கே. என். டக்ளஸ் தேவானந்தாவின் வழிநடத்தலின் மூலமும் மக்களின் ஒத்துழைப்பின் மூலமும் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளர் கே. வி. குகேந்திரன் (ஜெகன்) முயற்சியாலும் சேவை செய்து வரும் இவ் வேளையில், பல பிரதேச உறுப்பினர்களை துப்பாக்கிகுண்டுகளுக்கு இரை கொடுத்தும் தொடர்ந்து வரும் அச்சுறுத்தலின் மத்தியிலும் எமது மக்களின் பணிகளில் இருந்து விலகி ஓயப்போவதுமில்லை ஓடப்போவதுமில்லை என்பதை மக்களாகிய உங்களுக்கு தெரிவிப்பதுடன். எமது சபைகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்கள் எவை தங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்-

இங்ஙனம்

**திரு. ந. திரிலோகநாதன்,**
[வட்டுக்கோட்டைத்தொகுதி ஈ. பி.டி. பி
அமைப்பாளரும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை தலைவரும்]

**திரு. வே. மகேந்திரன்,**
(வட்டுக்கோட்டை தொகுதி ஈ. பீ. டி. பியின்
உதவிஅமைப்பாளரும் வலிகாமம் மேற்கு
பிரதேசசபையின் உபதலைவரும்)

### செய்யப்படவுள்ள வீதி வேலைகள்

01. கலைவாணி வீதிதிருத்தம், சித்தன்கேணி
02. வயிரவர்கோயில் திருத்தம், சித்தன்கேணி;
03. மாவடி வயிரவர்வீதி திருத்தம், சுழிபுரம்;
04. சத்தியக்காடு வீதிதிருத்தம், சுழிபுரம்.
05. பிள்ளையார்கோயில் வீதிதிருத்தம், மூளாய்
06. மாணிக் வயிரவர்கோயில் வீதிதிருத்தம், சுழிபுரம்
07. பறளாய் முருகமூர்த்தி வீதிதிருத்தம்,
08. முருகமூர்த்தி வீதி திருத்தம், சங்கானை;
09. பழைய தபாற்கந்தோர் வீதி திருத்தம், சங்கானை
10. வல்லை 1ம் வீதி திருத்தம், சங்கானை:
11. தேவாலயம்-மயான வீதி திருத்தம், சங்கானை
12. பாரதி வீதி திருத்தம், சங்கானை
13. சேத்துப்பிடிச்சி வீதி திருத்தம், சங்கானை;
14. பினாக் வீதி திருத்தம், சங்கானை;
15. தேவாலய வீதி 1ம் ஒழுங்கை திருத்தம், சங்கானை
16. ஓடக்கரை வீதி திருத்தம், சங்கானை;
17. முதலிகோயிலடி வீதி திருத்தம், வட்டுக்கோட்டை
18. கள்ளி வீதி திருத்தம் கட்டம் 2, வட்டுக்கோட்டை
19. சந்தை வீதி திருத்தம் கட்டம் 2, வட்டுக்கோட்டை
20. மழவராயர் வீதி திருத்தம், வட்டுக்கோட்டை;
21. திக்கிராய் வீதி திருத்தம், வட்டுக்கோட்டை;
22. கண்ணகை அம்மன்கோயில் திருத்தம், வட்டுக்கோட்டை.
23. அந்திரான் 1ம் ஒழுங்கைதிருத்தம், வட்டுக்கோட்டை
24. அராலிவடக்கு சேச் வீதி திருத்தம், அராலி.
25. துலனை அம்மன்கோயில் வீதி திருத்தம் அராலி;
26. ஊரத்தி வீதி திருத்தம், அராலி.
27. நொச்சிக்காட்டு வீதி திருத்தம், அராலி;
28. கம்பாவளை வீதி திருத்தம், அராலி
29. புளியடி வீதி திருத்தம், அராலி.
30. செட்டியாமடம் 2 ம் ஒழுங்கை திருத்தம், அராலி
31. வீமன் கலட்டி வீதி, அராலி.
32. அம்மாலை வீதி, பொன்னாலை;

### மேற்கொள்ளப்பட வேண்டியுள்ள கட்டட திருத்தம்

01. சுழிபுரம் அம்பாள் சனசமூக நிலைய திருத்தம்;
02. மனிதவள சனசமூக நிலைய திருத்தம்:
03. கொட்டியாவத்தை கலைவாணி சனசமூக நிலைய திருத்தம்.
04. கல்லை வேம்படி சனசமூக நிலைய திருத்தம்:
05. சுழிபுர உப அலுவலக கட்டட திருத்தம்:
06. விழிசுட்டி சனசமூக நிலைய கட்டட திருத்தம்:
07. சங்கானை அம்பாள் சனசமூக நிலைய திருத்தம்;
08. வட்டு கிழக்கு தாவளை சனசமூக நிலைய திருத்தம்.
09. அராலி வடக்கு சுடலை மடம் அமைத்தல்;
10. அராலி உப அலுவலகம் அமைத்தல் பகுதி 111;
11. வேலன் காடு சுடலை மடம் அமைத்தல், அராலி;

### விசேட நிதி 1999 (ஒருமில்லியன்)

| | | |
|---|---|---|
| 01. | விளாவெளிச் சுடலைமடம் அமைத்தல் | 100000.00 |
| 02. | ஜெனரேட்டர் கொள்வனவு | 50000.00 |
| 03. | இளைஞர் முன்னேற்றக் கழகம் - சித்தன்கேணி அராலி உப அலுவலக கட்டடம் அமைத்தல் | 350000.00 |
| 04. | காந்திஜி சனசமூக நிலைய கட்டடம் அமைத்தல் | 500000.00 |

### பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி - 2000 மூலம் செய்யப்பட்ட வேலைகள் விபரம்

| | | |
|---|---|---|
| 01. | பாணாவெட்டி வீதி திருத்தம் | 250000.00 |
| 02. | சத்தியக்காடு மீன் சந்தை கட்டடம் அமைத்தல் | 160000.00 |
| 03. | ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை மண்டபம் அமைத்தல் | 250000.00 |
| 04. | சுனோரின் இடல் (வலி - மேற்கு பிரதேச எல்லைக்குள்) | 50000.00 |
| 05. | பள்ளம் நிரப்புதல் சங்கானை வைத்தியசாலை | 40000.00 |
| 06. | சித்தன்கேணி சந்திக்கு அருகில் உள்ள குடிநீர்த்தாங்கி அமைத்தல் | 100000.00 |
| 07. | புத்தக கொள்வனவு | 150000.00 |

### றான் நிதி - 2000

| | | |
|---|---|---|
| 01. | பண்ணாகம் வீதி திருத்தம், கட்டம் II | 625000.00 |
| 02. | அராலி உப அலுவலக கட்டடம் அமைத்தல் | 500000.00 |
| 03. | கள்ளி வீதி திருத்தம் வட்டுக்கோட்டை | 450000.00 |
| 04. | சித்தன்கேணி சிவன்கோயில் திருத்தம் | 265000.00 |
| 05. | உடையார் வீதி திருத்தம், அராலி | 300000.00 |
| 06. | சங்கானை - வடலியடைப்பு ஆஸ்பத்திரி வீதி திருத்தம் | 375000.00 |
| 07. | சத்தியக்காடு மீன்சந்தைக் கட்டடம் அமைத்தல் | 235000.00 |
| 08. | சந்தை வீதி திருத்தம் வட்டுக்கோட்டை | 250000.00 |

### சபை நிதியில் செய்யப்பட்ட வேலைகள் - 2000

| | | |
|---|---|---|
| 01. | வலி - மேற்குப் பிரதேசசபை பெயர்ப் பலகை அமைத்தல் | 10200.00 |
| 02. | சந்தைக் கிணறு திருத்தம், வட்டுக்கோட்டை. | 63000.00 |
| 03. | பிள்ளையார் கோயில் கிணறு திருத்தம் வட்டுக்கோட்டை | 51000.00 |
| 04. | பிரதேச சபை வீதிகளுக்கு மக்கி ஊரி பறித்தல் | 295755.00 |
| 05. | வடக்கு அராலி நீர்விநியோகத்திட்ட வால்வு அறைஅமைத்தல் | 6000.00 |
| 06. | விளாவெளிச் சுடலை மடம் அமைத்தல் பகுதி II | 30000.00 |

### சபை நிதி முற்பணம்

| | | |
|---|---|---|
| 01. | அம்மன் வீதி திருத்தம், சித்தன்கேணி | 40000.00 |
| 02. | பண்ணாகம் வீதி திருத்தம், பகுதி I | 381001.68 |
| 03. | மூளாய் தேவாலய வீதி திருத்தம் | 345000.00 |

### பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி மூலம் செய்யப்படவுள்ள வேலைகள்

| | | |
|---|---|---|
| 01. | வழுக்கம்பரை முத்துமாரி அம்மன் கோயில் திருத்தம் தொல்புரம் | 100000.00 |
| 02. | சங்கானை இலுப்பைத்தான் முருகமூர்த்தி கோயில் திருத்தம் | 100000.00 |
| 03. | வடலியடைப்பு புதறாணை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயதிருத்தம் | 200000.00 |
| 04. | திச்சாமம் பாலர் பாடசாலை புனரமைப்பு | 100000.00 |
| 05. | கீரிமலை வீதி சித்தன்கேணி பெரிய தம்பிரான் கோயில் திருத்தம் | 50000.00 |
| 06. | சித்தன்கேணி கலைவாணி வீதி ஞானவைரவர் ஆலய திருத்தம் | 50000.00 |
| 07. | பண்ணாகம் விசுவத்தனை முருகமூர்த்தி கோயில் திருத்தம் | 150000.00 |
| 08. | மூளாய்ப் பிள்ளையார் கோயில் கலையரங்கம் திருத்தம் | 50000.00 |

# புதியனவற்றை புகுத்தும்போது பழையனவற்றை மறத்தல் கூடாது

## ஒலிப்பதிவுநாடா வெளியீட்டில் உரை

(அரியாலை)

''புதிய முயற்சிகளின் பயனாக லயமற்ற கவிதைகள் ஆக்கம் பெறுகின்றன. புதியனவற்றைப் புகுத்தும்போது பழையவற்றையும் இணைத்துச் செய்தலே ஆக்குவோனுக்கு அணி செய்கின்றது. புதிய இலக்கியங்கள் தோற்றம்பெறும்போது மரபுவழி செல்னெறி இலக்கியங்களை உள்வாங்கி அமைய வேண்டும். செல்னெறி இலக்கியங்களின் செழுமை காலத்தால் அழியாதது. கவிதையின் பண்பு எத்தவொரு வி-யத்துவத்தையும் குறிப்பால் உணர்த்துதல் ஆகும். அந்த வகையில் 'உயிரிசை' மூலம் வ் இளங்கவிஞர் நுண்ணிய உணர்வுகளை நுணுக்கமாகப் புகுத்தி இருக்கிறார். இப்புதிய முயற்சி பலரது கவனத்திற்கும் உரியதாகின்றது''

ஏழாலை செந்தமிழ் கலை மன்றத்தின் 'உயிரிசை' கவிதை ஒலி நாடா வெளியீட்டுவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை யா/ இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் கவிஞர் கலாநிதி இ. முருகையன் தலைமையில் நடைபெற்றபோது நயப்புரை வழங்கிய கவிஞர் சோ. பத்மநாதன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கு. றஜீபனால் உருவாக்கம் பெற்ற 'உயிரிசை'க்கு ஜு: அற்புதன் இசைவார்ப்பு செய்திருந்தார்.

கவிஞர் இ. முருகையன் தனது தலைமையுரையில் ''தமிழ்க்கவிதை காலங்காலமாக சமுதாயத்தில் நின்று நிலவி வருகிறது. சொற்களுக்கு ஓசை இருக்கிறது. அவ்வோசையை மெருகூட்டுகின்ற சக்தி இசைக்கு உண்டு. சிக்கல் வாய்ந்த தொழினுட்பமான இசையமைப்பை இன்றைய நவீன மென்பொருள் (SOFT WARE) பிரயோகம் இலக்குவாக்கியுள்ளது'' என்றார்.

ஆசியுரை வழங்கிய இலக்கிய கலாநிதி மு. கந்தையா 'திய (யுக்திகளின் மூலம் கவிதையை புதிய வடிவங்களில் உருவாக்குகிறார்கள். ஆனால் தமிழ்ப் பாரம்பரியத்தை விட்டு இளங்கவிஞர்கள் விலகக்கூடாது''- என்றார்.

செஞ்சொற்கொண்டல் ஆறு திருமுருகன் தனது ஆசியுரையில் ''படைப்பாளிகள் மற்றையோரை பண்படுத்தும் அதேவேளை அவர்கள் உள்ளத்திற்கு ஆறுதலையும் தருகிறார்கள். கவிஞன் வெளியிடும் உணர்ச்சிகளை உணர்வு ரீதியாக ஒன்றித்து பருகும் நிலையை சுவைஞர் பெறவேண்டும். உரிமைக்காக உயிரைக் கொடுத்துக்கொண்டிருக்கும் இம்மண்ணில் தமிழைபுழுதியிலே போடாது காப்பதற்கு 'உயிரிசை' போன்றவை உதவுகின்றன' என்றார்.

கவிஞர் கல்வயல் வே. குமாரசாமி வெளியீட்டுரை நிகழ்த்தினார். பிரமுகர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (க-106)

# உரும்பிராய் வைத்தீஸ்வரா சனசமூக நிலையத்திற்கென 75ஆயிரம் ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் மேற்கில் அமைந்துள்ள ஸ்ரீ வைத்தீஸ்வரா சனசமூக நிலைய புனரமைப்பிற்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ: பி. டி. பி) அமைப்பின் அச்சுவேலி பொறுப்பாளரும்வலி-கிழக்கு பிரதேச சபையின் உபதலைவருமான ரவி ரூபா 75 ஆயிரம் ஒதுக்கியுள்ளார்.

மேலும்இப்பகுதியில் உள்ள நாகபூசணி அம்மன் ஆலய மூலஸ்தான வேலைகளுக்கு ரூ. 5 இலட்சமும் ஒதுக்கியுள்ளார்.

இதேவேளை மேற்படி சனசமூக நிலையத்திற்கு அண்மையாக உள்ள வீதிகளை வரும் மாத முடிவுக்குள் திருத்தம் செய்வதென கடந்த 15-ம் திகதி வைத்தீஸ்வரா சனசமூக நிலையத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. (க)

# பிரித்தானியா வழங்கிய ஜெனரேற்றர் யாழ்ப்பாணத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தின் மின்சார விநியோகத்தை சீர் செய்வதற்கு மேலும் இரு ஜெனரேற்றர்கள் அரசாங்கத்தால் வழங்கப்படவுள்ளது.

பிரித்தானிய அரசாங்கத்தால் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ள இவ் ஜெனரேற்றர்களை யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா யாழ் மாவட்டத்துக்கு வழங்குமாறு கோரியதை அடுத்தே ஜெனரேற்றர்கள் வழங்கப்படவுள்ளது:

இதன்மூலம் நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறைப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-2)

## விபத்தில்காயம்

(சச்சமோட்டை)

வட்டுக்கோட்டை வீதி மூளாய்ப்பகுதியில் நேற்றுமுன்தினம்நிகழ்ந்தவிபத்தின்போது மோட்டார்சைக்கிளில்பயணம் செய்தநபர்ஒருவர் காலில் பலத்தகாயமடைந்தார். (த-59)

பொன்னையோ பொருளையோ விரும்பாது

# சமயப்பணி புரிந்து வருபவர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம்

## பேராசிரியர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாவலர் வாழ்ந்து காட்டிய வழியில், பொன்னையோ அன்றி பொருளையோ, புகழையோ கருத்திற் கொள்ளாது, சமயக் கருத்துக்களை இடம் இடமாகச் சென்று பரப்பும் பணியில் இன்றும் ஈடுபடுபவர் ஒரு சிலரே.

அந்த ஒரு சிலருள், நாவலர் காட்டிவைத்த வழியில் இன்று எம்மிடையே வாழ்ந்து, வழிகாட்டியாய் திகழ்பவர் செந்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் என்று கூறினால் பொருத்தமானதே.

இவ்வாறு, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் க சிற்றம்பலம் தெரிவித்தார்.

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலய உற்சவ காலத்தில் தொடர் சொற்பொழிவு நிகழ்த்திய சிவமகாலிங்கத்தை பாராட்டும் வகையில் எடுக்கப்பட்ட விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பேசுகையில் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றுகையில்,

சமயத்தைப் பரப்பி, அதன் வழி ஒழுகுவோர் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இச்செயற்பாடு,இன்றைக்கு மட்டுமல்லாது-என்றைக்கும் சமயத்தின்பால் அனைவரையும் நாட்டம் கொள்ளச் செய்யும் என்றார்.

இவ் விழாவில் உரையாற்றிய ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம், கல்வெட்டுப் பெருமையுடன் கூடிய உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கருணையே உருவானவர்.

செந்தமிழ் வித்தகரின் தொடர் சொற்பொழிவின் உட்கருத்தையும் உண்மைப் பொருளையும் இங்குள்ள சைவர்கள் அனைவரும் கைக்கொண்டு, அதன் வழிநடக்கவும் பிள்ளையார் கருணை புரிய வேண்டும் என்றார். (உ)

## போரூட் நிறுவன உதவி

(மந்திகை)

அல்வாய்வடக்கு இந்து தமிழ்கலவன் பாடசாலையிலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாமிற்கு பருத்தித்துறை போரூட்நிறுவனத்தினர் மலசலகூடம்ஒன்றினை அமைத்துக்கொடுத்துள்ளனர்.

இந்நிறுவனத்தினால் அங்குள்ள கிணறுஒன்றும் புனரமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது: (த-23)

## நாய்களுக்கு தடுப்பூசி

[நல்லூர்]

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி போடும் பணியில்.

இன்று வியாழக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 10 30 மணிவரை கொக்குவில் மேற்கு காந்திஜி சனசமூக நிலையத்திலும்,

மு.ப. 10.45மணிதொடக்கம் பி.ப. 12.15 மணி வரை ஆறுகால்மடம் கிராம முன்னேற்றச் சங்கத்திலும்.

பி.ப. 1.00 மணி தொடக்கம் பி.ப. 2.30 மணி வரை கொக்குவில் மேற்கு பிடாரி கோவிலடியிலும் தடுப்பூசி போடப்படும். [செ-103]

# க. பொ. த (உ, த) பரீட்சார்த்திகளுக்கு அறிவுறுத்தல் கூட்டம்

ஆகஸ்ட்மாதம்நடை பெற்ற க. பொ. த (உ/த) பரீட்சையில் புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக வலிகாமம் கல்வி வலயத்தில் தோற்றிய பின்வரும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 22ம்திகதி வெள்ளிக்கிழமை பி.ப 2.00மணிக்கு வலிகாம கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

கீழ்காணும் பெயர் விபரங்கள் தரப்பட்ட பரீட்சார்த்திகள் மேற்படி கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்:

சுதர்ஜினி சிவசுப்பிரமணியம் ஊரெழு மேற்கு, சுன்னாகம்.

தொடர்இல: (1001647001)

சுதர்ஜினி சிவசுப்பிரமணியம், ஊரெ மேற்கு. சுன்னாகம். (தொடர் இல ; 1001647002)

சுபாசினி அரசரட்ணம் டிஸ்பென்சறி லேன், புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம்.

கோபாலகிருஸ்ணன் ரஜனிகாந்த், ''கோகுலம்'' விளையாட்டு மைதான வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

கனகசபை நேசன், '' பாலமுருகன் இல்லம்'' ஊரெழு மேற்கு, சுன்னாகம்.

சண்முகராஜா ரச்நீகன், அச்சுவேலி தெற்கு அச்சுவேலி

சுப்பையா இளங்கோவன், மே/பா, போட்டோ ஸ்ரீ, குளப்பிட்டி, கொக்குவில்.

குருசுமுத்து அன்ரனிஜெஸ்லி கீ, குளமங்கால், மல்லாகம்.

வல்லிபுரம் கமலேந்தினி, தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை.

சிவராசா வினோதினி, தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை

அன்ரனிற்றா நிசாந்தினி, சூராவத்தை சுன்னாகம்.

குணசேகரம் சுதர்சன், கோட்டைக்காடு, மல்லாகம்

எஸ். சிவசுதன், புவியந்தோட்டம், மல்லாகம்.

நல்லையா விஜயானந்தன், உடுவில் கிழக்கு, உடுவில்.

கந்தசாமி மகிந்தன், உடுவில் கிழக்கு, உடுவில்.

ஸ்ரீ வாசுகி ஸ்ரீபாலசண்முகம், வன்னிய சிங்கம் லேன், இணுவில் தெற்கு, இணுவில். (க)

# இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு

## பாவனையாளர் குமுறல்

(தென்மராட்சி)

வலிகாமம் பிரதேசத்திலுள்ள இடம்பெயர்ந்தவர்கள் தங்கியுள்ள முகாம்களில் தண்ணீர் பெரும் பிரச்சினையாக இருந்து வருவதால் அம்மக்கள் பெரும் கஸ்டங்களை அனுபவித்து வருகின்றனர் எனத் தெரியவருகிறது.

அங்குள்ள ஒரு குறிப்பிட்ட முகாமில் இருக்கும் 75 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 300 பேர் ஒரு கிணற்றுத் தண்ணீரையே பாவித்து வருகின்றனர்.

இதனால் முகாமில் தங்கியுள்ளவர்கள் தமது தண்ணீர் தேவையை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முடியாமல் உள்ளது.

அதேவேளை முகாமை அண்டிய பகுதிகளில் தனியார் வீடுகளிலிருக்கும் கிணறுகளை இடம் பெயர்ந்தவர்கள் பாவிப்பதற்கும் தற்போது இறுக்கமான கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், சில வீடுகளில் நிரந்தரமாகவே அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (க-77)

## பிரிவுபசார விழா

(சங்கானை)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச் செல்லும் உதவித்திட்டமிடல் பணிப்பாளர் எஸ். பரமேஸ்வரநாதனின் பிரிவுபசாரவிழா கடந்த திங்கட்கிழமை வலிமேற்கு பதில் பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் நடைபெற்றது. (உ-24)


நடைமுறைச் சாத்தியமான வழிகளில்

அன்றாடப் பிரச்சினைகளுக்கு பரிகாரம் காணவும்

தொலை நோக்குச் சிந்தனையுடன்

அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காணவும்

என்றும் எம்மை ஆதரித்திடுவீர்

X

என்றும் உங்கள் சின்னம் நங்கூரம் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட் + ஈரோஸ்)

(1689)

## கள்ளச்சாராயம் கடத்த முற்பட்ட அளவெட்டி வாசிக்கு ஒருவருட சிறை

(யாழ்ப்பாணம்)

கள்ளச்சாராயம் கடத்த முற்பட்ட அளவெட்டி வாசியை 25ஆயிரம் ரூபா குற்றப்பணம் செலுத்தவேண்டும் இல்லையேல் ஒருவருட சிறை வாழ்வு அனுபவிக்கவேண்டும் என மல்லாகம் நீதிமன்ற நீதிபதி உத்தரவு வழங்கியுள்ளார்.

கள்ளச்சாராயம் கடத்த முற்பட்ட வேளை, கையும் மெய்யுமாகப் பிடிபட்ட மேற்படி அளவெட்டி வாசியை தெல்லிப்பழை பொலிஸார், மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

விசாரணைகளின் போது சம்பந்தப்பட்டவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து, நீதிபதி மேற்படி உத்தரவினை வழங்கியுள்ளார்.

இதேசமயம்,

குற்றப்பணம் செலுத்த தம்மிடம் வசதிஇல்லை என பிரஸ்தாப நபர் தெரிவித்ததை யடுத்து, யாழ்-சிறைச்சாலைக்கு இவர் அனுப்பப்பட்டுள்ளார். (உ-12)

## யாழ்.குடாநாட்டில் பாதுகாப்பு தேடும் சிஹல உறுமய கட்சி

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் போட்டியிடும் சிஹல உறுமய கட்சி, தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில் தமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என பாதுகாப்பு அமைச்சைக் கோரியுள்ளது.

இது தொடர்பாக மேற்படி கட்சியின் செயலாளர் திலக கருணாரத்ன கடித மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவ் வேண்டுகோளில் யாழ். குடாநாட்டுநிலைமை தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களை நடத்துமளவிற்கு சாதகமானதாக இல்லை.

எனவே, வீடு வீடாகச் சென்று எமது பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளத்திட்டமிட்டுள்ளோம்.

இச்செயற்பாட்டின் போது எமது பாதுகாப்பினை உறுதிப்படுத்த, பாதுகாப்பு அமைச்சு ஒத்துழைக்க வேண்டும் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## நவாலிப் பகுதிக்கு மின்சாரம் ஈ.பி.டி.பி. யினருக்கு நன்றி

### அப்பகுதி மக்கள் தெரிவிப்பு

[மானிப்பாய்]

நவாலிப்பகுதிக்கு மின்சாரம் வழங்குமாறுகோரி நவாலி அந்திரான் முருகமூர்த்தி பரிபாலன சபையினர் மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஊடாக டக்ளஸ் தேவானந்தாவுக்கு மகஜர் ஒன்றை அண்மையில் சமர்ப்பித்திருந்தனர் இதற்கமைய அவசர அவசரமாக இலங்கை மின்சார சபையினரால் நவாலி அரசடியில் மின்பிறப்பாக்கி ஒன்று பொருத்தப்பட்டு சில தினங்களுக்கு முன்னர் அப்பகுதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதனையிட்டு இப்பகுதி மக்கள் ஈ.பி.டி.பி. அமைப்பினருக்கு தமது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துள்ளனர். [க-120]


# கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்டக் கூட்டுறவுச்
சபைத்தலைவரும்
எமது மதிப்புக்கும் உரிய
திரு.பெ. கனகசபாபதி அவர்களின்
வாழ்க்கைத் துணைவியார்

## திருமதி தவஜோதி கனகசபாபதி

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து அன்னாரின் ஆத்மா சிவபதமடைய பிரார்த்திக்கின்றோம்.

'ஓம் சாந்தி'

பணிப்பாளர், பணியாளர்
கூட். நெல். ப. நோ. கூ. சங்கம்
(கி/806)



இலவச சிகிச்சையும்
மருத்துவ ஆலோசனையும்.

# New Lant Clinic

(நியூலான்ட் கிளினிக்)

மெடிலான் ஆங்கில மருந்து
நிறுவனம் அருகில்

பிரதான வீதி, சங்கானை.

10-9-2000முதல் 10-10-2000 வரை

M. B. B. S. டாக்டர்களினால் தினமும்
மாலை 4 மணி முதல் 6 மணி வரை இலவச
சிகிச்சையும் மருத்துவ ஆலோசனையும்
பெற்றுக் கொள்ளலாம்

[கி/778]


இம் மாதம் 19 ஆம் திகதி வெளியாகிய

# கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரணதர) மாதிரிப் பரீட்சை - 2000

## வரலாறும் சமூகக்கல்வியும்

### மாதிரி வினாத்தாள் 3 பகுதி - II விடைகள்

ஆக்கம்: இரா. கணேசானந்தன்

(ஆசிரியர். யா/நெடுந்தீவு மகாவித்தியாலயம்.நெடுந்தீவு)

---

I

1) B— சிசுமரண விதம் உயர்வாக இருத்தல்
C— அரசியல் அமைதியின்மை காணப்படுதல்
E— சர்வதேச வர்த்தகத்தில் சாதகமற்ற வர்த்தக நிலுவை காணப்படுதல்

2) அ) பௌதீக வாழ்க்கைப் பண்புச் சுட்டி
ஆ) மனித அபிவிருத்திச் சுட்டி
இ) மனித சுதந்திரச் சுட்டி
ஈ) ஒரு வைத்தியருக்கான நோயாளர்களின் எண்ணிக்கை

3) அ) சூழல் மாசடைதல்:-

கைத்தொழிற்சாலை பெருக்கத்தினாலும், தொழிநுட்ப விருத்தி காரணமாக ஏற்பட்ட புதிய கண்டுபிடிப்புக்களாலும் இவற்றில் இருந்து வெளிவரும் புகை, கழிவுப் பொருட்கள் பௌதீகச் சூழல் கூறுகளான நிலம், நீர், வளி என்பவற்றைச் சென்றடைவதனால் அவை மாசடைந்து போகின்றன.

ஆ) மூலவளங்கள் அருகிச் செல்லுதல்:-

தொழில்நுட்ப விருத்தியினாலும், கைத்தொழிற்சாலைகளின் பெருக்கத்தினாலும் கைத்தொழில் பொருள் உற்பத்தியை அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே அதற்கு அதிகளவு மூலவளங்கள் பயன்படுத்தப்பட வேண்டி உள்ளது. ஆனால் இயற்கை மூலவளங்கள் புவியில் வரையறுக்கப்பட்ட அளவில் காணப்படுகின்றன. இதனால் மூலவளங்கள் அருகி வருகின்றன.

4) அ) பெற்றோலிய இறக்குமதிக்குப் பெருமளவு பணத்தினைச் செலவிட வேண்டி இருத்தல். இதனால் அந்நியச் செலாவணியை அதிகளவில் சேமிக்க முடியாமை இருத்தல்.

அபிவிருத்தி அடையும் நாடுகள் பெற்றோலிய இறக்குமதிக்குப் பெருமளவு பணத்தினைச் செலவிடவேண்டி இருப்பதனால் அத்தகைய நாடுகளுக்கு வெளிநாடுகளில் இருந்து கிடைக்கின்ற அந்நியச் செலாவணி வருமானத்தினால் பெரும்பகுதி எண்ணெய் இறக்குமதிக்காகப் பயன்படுத்த வேண்டி உள்ளது. எனவே அந்நியச் செலாவணிச் சேமிப்புக் குறைந்து நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி பாதிப்படைய வழிவகுக்கும்.

ஆ) அபிவிருத்தியடையும் நாடுகளின் உற்பத்திச் செலவு போக்குவரத்துச் செலவு உயர்வடைதல். இதனால் வெளிநாடுகளில் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்த முடியாமை:-

பெற்றோலிய விலை விரைவாக உயர்வடைவதனால் அபிவிருத்தியடையும் நாடுகளின் உற்பத்திப் பொருட்களுக்கான உற்பத்திச் செலவு உயர்வடைகின்றது. இயந்திரசாதனங்களை இயக்குதல், வெப்பமின்வலு என்பவற்றிற்கு பெற்றோலியம் அதிகளவில் பயன்படுத்த வேண்டி இருத்தல். அத்துடன் பொருட்களை ஏற்றிச் செல்லும் போக்குவரத்துச் செலவும் உயர்வடைகின்றது. இதனால் பொருட்களின் விலை உயர்ந்து அவ் உற்பத்திப் பொருட்களை வெளிநாட்டுச் சந்தைகளில் சந்தைப்படுத்துவது சிரமமாவதனால் பொருட்களின்விற்பனை குறைவடைகின்றது. இதனால் வெளிநாட்டு அந்நியச் செலாவணி வருமானங்களை பெருமளவில் பெறமுடிவதில்லை.

II

1) (அ) தென்கொரியா (ஆ) ஹொங்ஹொங் (இ) தாய்வான்

2) (அ) பௌதீக இயற்கை வளங்கள் பெருமளவில் காணப்படாத போதிலும் கைத்தொழில்துறையில் விருத்தியடைந்த ஆசிய நாடுகளாக விளங்குதல்.

(ஆ) தேர்ச்சி பெற்ற மனித வளம் காணப்படுவதோடு தொழினுட்ப அறிவில் முன்னேறிய நாடுகளாக விளங்குதல்.

(இ) மகாஞான பௌத்தமதத்தினதும், இன்ரோ தர்மத்தினதும் செல்வாக்கு இவ்வலய நாடுகளில் காணப்படுதல்

ஈ) உயர்ந்த ஆள்வீத வருமானத்தைப் பெறும் நாடுகளாகவும், உயர்ந்த வாழ்க்கைத் தரத்தினை அனுபவிக்கும் ஆசிய நாடுகளாகவும் விளங்குதல்.

3) (அ) ஜப்பானும் அயல்நாடுகளும் என்ற வலயத்தின் ஆள்வீத வருமானம் உயர்வானதாக இருத்தல:-

ஜப்பானும் அயல் நாடுகள் கைத்தொழில், விவசாயத்துறையில் விருத்தியடைந்த நாடுகளாக உள்ளன. ஆனால் தென்னாசிய நாடுகளின் மேற்கூறிய கைத்தொழில் விவசாயத்துறைகள் விருத்தி குன்றிய நிலையில் காணப்படுகின்றன. எனவே தென்னாசிய நாடுகளை விட உயர் ஆள்வீத வருமானத்தினைப் பெறுகின்ற நாடுகளாக ஜப்பானும் அயல்நாடுகளும் காணப்படுவதனால் இந்நாட்டு மக்கள் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, பண்பாடு என்பவற்றில் உயர்ந்த நிலையில் விருத்தியடைந்து காணப்பட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் உயர் மட்டத்தில் நிலவும் நாடுகளாக இருக்கின்றன,

ஜப்பானும் அயல் நாடுகளின் மக்களது கல்வி அறிவு, சுகாதார நிலை உயர் மட்டத்தில் காணப்படுதல்

ஆனால் தென்னாசிய நாடுகளில்ஜப்பானும்அயல் நாடுகளின் மக்களதுகல்வி அறிவு சுகாதார நிலைஉயர்மட்டத்தில் காணப்படுகின்றது:

குன்றிய நிலையிலேயே உள்ளது. எனவே இதனால் ஜப்பானும் அயல்நாட்டு மக்களது கல்வி அறிவு, எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் உயர்வாகவும், சிசுமரணவீதம் மிகக் குறைவாகவும் காணப்பட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் தென்னாசிய நாடுகளை விட மிக உயர்வாகக் காணப்படுகின்றது.

4) (அ) கல்வி அறிவு இவ்வலய நாடுகளில் பின்தங்கிக் காணப்படுதல்:-

மத்தியகிழக்கும் வட ஆபிரிக்கா என்ற வலய நாடுகளில் கல்வி அறிவு குன்றிப் பின்தங்கிக் காணப்படுவதனால் இவ்வலய மக்களின் எழுத்தறிவு வீதம் குறைவாகக் காணப்பட்டு சமூக விருத்தி குன்றிக் காணப்படுகின்றமை.

(ஆ) சுகாதார நிலை இவ் வலய நாடுகளில் வளர்ச்சி குன்றிக் காணப்படுதல்:-

மத்திய கிழக்கும் வட ஆபிரிக்கா நாடுகள் பெற்றோலிய உற்பத்தி மூலம் அதிக வருமானத்தைப் பெறுகின்ற போதிலும் மக்களின் சுகாதார நிலை பின்தங்கியே காணப்படுகின்றது. அதாவது சிசுமரண வீதம் உயர்வாகவும் எதிர்பார்க்கப்படும் ஆயுட் காலம் குறைவாகவும் காணப்பட்டு சமூக விருத்தி பின்தங்கி காணப்படுகின்றமை.

இதனால் மத்திய கிழக்கும் வட ஆபிரிக்க நாடுகளும் உயர் வருமானத்தைப் பெறுகின்ற போதிலும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் என்ற வகுதியிலேயே அடக்கப்படுகின்றன.

# பொ.ஐ.ஐ. முன்னணி ஆதரவாளர் கழுத்து வெட்டப்பட்டு கொலை

## அத்தனகலையில் சம்பவம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தீவிர ஆதரவாளர்களில் ஒருவர் அண்மையில் கழுத்து வெட்டப்பட்டுகொடூரமான முறையில் கொல்லப்பட்டுள்ளார்.

அத்தனகலை என்ற இடத்தில் நடைபெற்ற இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர் 50 வயதுடைய நபர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதியில் தனியாக பிரயாணம் செய்து கொண்டிருந்த வேளை, ஆயுதங்களுடன் வந்த குழுவொன்றே மேற்படி கொலைச் செயலைப் புரிந்திருக்கலாம் என நம்பப்படுவதாகவும் இது தொடர்பான விசாரணைகளை நடத்திவரும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இக்கொலை அரசியல் படுகொலையா அல்லது தனிப்பட்ட குரோத உணர்வால் ஏற்பட்டதா என ஊர்ஜிதம் செய்ய முடியாது இருக்கின்ற போதிலும் கொலை செய்யப்பட்டவர் ஓர் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தீவிர ஆதரவாளர் என்ற வகையில் அரசியல் படுகொலை என்றே கருதப்படுவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ)

## இன்று ஒரு தகவல்

### ஏவுகணைபோல் மனதில் இலக்குகளை ஏந்திவாழ்

ஏவுகணையை நிர்மாணிக்கின்ற புத்திசாலித்தனத்தை வளர்த்துக்கொண்டுள்ள மனிதனுக்கு அதனிடம்இருந்து சிலபாடங்களை கற்றுக்கொள்ளும் புத்திசாலித்தனமும்இருக்கவேண்டும்.

குறிவைக்கப்பட்ட இடத்தைநோக்கிச் செல்லுகின்ற இயந்திரநுட்பம் ஏவுகணையில் இருக்கிறது. அது தன்னுடையபாதையில் இருந்து சற்றேவிலகினாலும் செல்கின்றதிசையில் தவறு நிகழ்ந்தாலும் இப்படி அடிக்கடிநிகழ்வதுஉண்டு. அதைச் செலுத்துகின்ற அமைப்பு தேவையான திருத்தங்களைச் செய்து இலக்கைநோக்கிச் செல்லுகின்ற சரியானபாதையில் அதைத்திருப்பி விடுகின்றது.

இங்கே இன்னொருவிஷயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏவுகணை நிலையாக இருக்கும்போது அதன் போக்கை அது திருத்திக்கொள்ளமுடியாது. இலக்கை நோக்கி அது நகர்ந்துசெல்லும்போதுதான் அதனுடைய தவறுகளை அது திருத்திக்கொள்ளமுடியும்.

ஏவுகணையிடமிருந்து இப்போது நீங்கள் என்னதெரிந்துகொள்ளப்போகிறீர்கள்? வாழ்க்கைபூராவும் உங்களிற்குப் பயன்தரக்கூடிய நல்ல படிப்பினைகள் நீங்கள் கற்றுக்கொள்ளமுடியும்.

★ வாழ்க்கையில்உங்களிற்கு இலக்கு இருக்கவேண்டும் மனயியல் நிபுணர்கள் லட்சியபூர்வமான வாழ்க்கைநோக்கு என்று சொல்லுவார்கள்.

★ உங்கள் இலக்கைநோக்கி நீங்கள் செல்லுகின்றபோது ஏவுகணையைப்போலவே பாதைமாறுதல் திசைமாறுதல்போன்ற தவறுகளை நீங்களும் செய்வீர்கள்.

★ இந்தத்தவறுகளை நீங்கள் தவறுகள்என்று ஏற்றுக்கொள்ளக கற்கவேண்டும். இல்லாவிட்டால் திருத்தம் தேவையென்பதே உங்களிற்குத் தோன்றாமல் போய்விடும்.

★ தவறுகளை அடையாளம் கண்டு ஏற்றுக்கொண்டுவிட்டபிறகு அவற்றைத்திருத்திக்கொண்டு இலக்கைநோக்கிய சரியானபாதைக்கு நீங்கள் வந்துவிடவேண்டும். தவறுகளுக்காக ஏவுகணை எவ்வாறுகுழப்பமோ வெட்கமோ அடைவதில்லையோ அதைப்போலவே நீங்களும் நேர்ந்துவிட்ட தவறுகளிற்காக குழப்பம் அடையக்கூடாது. வெட்கப்படக்கூடாது.

தவறுசெய்வதும் அதைக் கண்டுபிடித்து ஏற்றுக்கொள்வதும் பின்னர் திருத்திக்கொள்வதும்இலக்கைநோக்கி சரியாகச் செல்கின்றவழிஎன்பதை ஏவுகணையைப் போலவே நீங்கள் அறிந்து இருக்கவேண்டும்.

ஏவுகணைகள் எவ்வாறு ஒரே நேர்கோட்டில்சென்று இலக்கை அடைவதில்லையோ அதைப்போலத்தான் மனிதர்களும் நேராகவேசென்று இலக்கை அடைந்துவிடமுடியாது.

ஏவுகணைகளும்சரி, மனிதர்களும்சரி அந்தஅளவுக்கு முழுமைபெற்று இருக்கமுடியாது அப்படியிருக்க வேண்டிய அவசியமும்இல்லை. அதனால்தான் திருத்திக்கொள்ளும் உபாயம் தேவைப்படுகின்றது.

தர்சினி

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

செப்ரெம்பர்மாதம்29-ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்களின் தொடர்ச்சி பிரதேச செயலர் பிரிவுரீதியாகத்தரப்படுகிறது

நல்லூர்

| | |
|---|---|
| 149972 ஏ | 149972 பி |
| 149989 ஏ | 149989 பி |
| 152388 ஏ | 152388 பி |
| 152434 ஏ | 152434 பி |
| 152434 சி | 152447 ஏ |
| 152447 பி | 152447 சி |
| 152447 டி | 152496 ஏ |
| 152496 பி | 152935 ஏ |
| 154048 ஏ | 154048 பி |
| 154169 ஏ | 154169 பி |
| 154269 ஏ | 154269 பி |
| 154269 சி | 154269 டி |
| 154269 ஈ | 156196 ஏ |
| 156245 ஏ | 156245 பி |
| 156245 சி | 156245 டி |
| 156245 ஈ | 156245 எவ் |
| 156245 ஜி | 156269 ஏ |
| 156278 ஏ | 156311 ஏ |
| 156311 பி | 156311 சி |
| 156322 | 156327 ஏ |
| 156327 பி | 156327 சி |
| 156398 ஏ | 156398 பி |
| 156398 சி | 156398 டி |
| 156398 ஈ | 156452 ஏ |
| 156452 பி | 156452 சி |
| 156452 டி | 156489 சி |
| 156498 ஏ | 156498 பி |
| 156524 பி | 156525 ஏ |
| 156525 பி | 156536 ஏ |
| 156536 பி | 156549 ஏ |
| 156552 ஏ | 156552 பி |
| 156618 ஏ | 156618 பி |
| 156650 ஏ | 156651 ஏ |
| 159018 ஏ | 159018 பி |
| 159018 சி | 159030 ஏ |
| 159065 ஏ | 159065 பி |
| 159065 சி | 159200 ஏ |
| 159200 பி | 159200 சி |
| 159200 டி | 159250 ஏ |
| 159262 ஏ | 159262 பி |
| 159262 சி | 159349 ஏ |
| 159349 பி | 159349 சி |
| 159349 டி | 159349 ஈ |
| 159349 எவ் | 159378 ஏ |
| 159378 பி | 159378 சி |
| 159450 ஏ | 159450 பி |
| 159450 சி | 159450 டி |
| 160940 ஏ | 160965 ஏ |
| 160965 பி | 161009 ஏ |
| 161009 பி | 161009 சி |
| 161009 டி | 161009 ஈ |
| 161037 ஏ | 161119 ஏ |
| 161119 பி | 161119 சி |

உடுவில்

| | |
|---|---|
| 157411 ஏ | 157424 ஏ |
| 157424 பி | 157424 சி |

(த)

## காமினி அத்துக்கோறள வழக்கு தாக்கல் செய்தார்

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் என்பவற்றினூடாக அரசு தனக்கு சாதகமான தேர்தல் ஒலிபரப்புகளை செய்யக் கூடாதென்றும் அது சட்ட விரோதமானது என்றும் ஐக்கியதேசியக் கட்சியின் செயலாளர் காமினி அத்துக்கோறளை வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

கொழும்புமேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட இவ் வழக்குவிசாரணை எதிர்வரும் 22ம் திகதி வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (வ)

## இடம்பெயர் முகாம்களுக்கருகில் மினிசினிமா திரையரங்குகள்

### மாணவர் பெரும் கொண்டாட்டம்

[தென்மராட்சி]

வலிகாமம் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்கள் சில வற்றுக்கு அருகிலுள்ள மினி சினிமா திரையரங்குகளில் தொடர்ச்சியாகப் படங்கள் திரையிடப்படுவது குறித்து இடம் பெயர்ந்தவர்கள் பெரும்சிரமங்களை எதிர் நோக்கி வருவதாகத் தெரிய வருகின்றது.

இம் முகாம்களில் இருந்து பாடசாலைகளுக்குச் செல்கின்றமாணவர்கள் இத்தகைய மினிசினிமாக்களினால் தமது கல்வியில் அதிகபட்ச கவனத்தைக் காட்டாமல் இருப்பதாகவும் இடம் பெயர்ந்த பெற்றோர் அதிருப்தி தெரிவித்துள்ளனர் என அறியப்படுகின்றது

அதே சமயம் பாடசாலைகளுக்குச்செல்லாமல்வீடுகளில் இருந்து வருகின்ற மாணவர்கள் ,மினிசினிமாக்களில் படங்களைப் பார்வையிடச் சென்று விடுகின்றனர் எனவும் கூறப்படுகின்றது.

இத்தகைய மினிசினிமாக்கள் இயங்குவதற்குரிய அடிப்படைச்சம்மதங்களையும் அனுமதியையும் வழங்கிய உள்ளூராட்சி அமைப்புகளுக்கு இது விடயம் பற்றிப் புகார்கள் தெரிவித்திருந்தும்கூட எவ்வித நடவடிக்கையும் இது வரை எடுக்கப்படவில்லை எனக் கூறப்படுகின்றது. [க-77]

## யாழ். பகுதியில் ஐ.தே. கட்சியின் பிரச்சாரம் வெகு மும்முரம்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் சூடு பிடித்து வரும் கட்சிப் பிரச்சாரங்களில், இலங்கையின் பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே. கட்சியும் தற்போது மும்முரமாக செயற்படுகிறது.

இக்கட்சி தமது சின்னம் பொறித்த கட்சியின் கொள்கைகளை மக்களிடையே விளக்குவதிலும், பரப்புவதிலும், துண்டுப்பிரசுரங்களை ஒட்டுவதிலும் ஈடுபட்டு வருகிறது.

பிரச்சார சின்னங்களில் எதிர்க் கட்சித் தலைவர் 'ரணில் விக்கிரம சிங்கவினுடைய உருவப் படங்கள் பெரிதும் முக்கியத்துவப்படுத்துவதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

(த-59)

## கைப்பற்றப்பட்ட பகுதியை படையினர் பலப்படுத்துகின்றனராம்

### விசேட தகவல் ஊடகம் தகவல்

(கொழும்பு)

இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட சாவகச்சேரிப் பகுதி பலப்படுத்தப்பட்டு வருவதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இவ்வறிக்கையில் படையினரால் கடந்த 17ஆம் திகதி மீண்டும் கைப்பற்றப்பட்ட பகுதிகள் பலப்படுத்தப்படுவதுடன் பாதுகாப்பு அரண்களும் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பீரங்கிப் படையினரின் கடுமையான தாக்குதல்களும் விமானப் படையினரின் 'மிக்' விமானங்களின் குண்டு வீச்சுகளும் தொடர்ந்து இடம் பெற்று வருவதாகவும் தகவல் நிலையம் மேலும் அறிவித்துள்ளது. (ந-4)

## வயோதிப மாதுவிற்கு உதவிய குடும்பஸ்தர் தாக்கப்பட்டார்

### துன்னாலையில் சம்பவம்

[மந்திகை]

வீதியால் சென்று கொண்டிருந்த நபர்ஒருவர் பாதை தவறிய நிலையில் உதவிகோரிய வயோதிப மாது ஒருவரை ஏற்றிச் சென்றதற்காக அப்பெண்ணின் உறவினர்களால் தாக்கப்பட்டார்.

மேற்படி சம்பவம் அண்மையில் துன்னாலைப் பகுதியில் இடம் பெற்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது தென்மராட்சியிலிருந்து இடம் பெயர்ந்து இப்பெண் துன்னாலையிலுள்ள தனது உறவினர் வீட்டில் அண்மையில் தங்கியுள்ளார்.

தேவையின் பொருட்டு வெளியில் சென்று இப் பெண் மீண்டும் தனது வீட்டிற்கு செல்ல வழி தேடியபோதே மேற்படி நபர் உதவி புரிந்தார்.

பிரஸ்தாப வயோதிப பெண்ணிற்கும் அவரது உறவினருக்குமிடையில் ஏற்கனவே நிலவிய பகைமையே இத்தாக்குதலிற்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

பதிலிற்கு தாக்குதலிற்குள்ளான நபரது ஆதரவாளர்கள் கொண்ட குழுவினர் வயோதிப பெண்ணின் உறவினர்களை தாக்கியதாகவும் கூறப்படுகிறது. (த-23)


# சுயேச்சைக் குழு இல-3

(ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவுடன்)



தூரத்தில் உள்ளோர் தொடர்புகொள்ள தொலைபேசியே

யாழ். மக்கள் துயரங்கள் துடைக்கும், உங்கள் சின்னமும் தொலைபேசியே

(இ-788)

# மேற்கு வங்கத்தில் தொடர்மழை
# 10 பேர் பலி 9 இலட்சம் பேர் பாதிப்பு

(கல்கத்தா)
மேற்கு வங்கத்தில் தொடர்ந்து பெய்யும் மழையால் 10 பேர் பலியாகினர். 9 இலட்சத்துக்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டனர்.

மேற்கு வங்கத்தில் கல்கத்தா உட்பட 5 மாவட்டங்களில் தொடர்ந்து பெய்யும் மழை வெள்ளத்தால் மக்கள் அவதிக்குள்ளாகி இருப்பதாகவும் 9 இலட்சம் பேர் வீடு வாசல் மற்றும் உடைமைகளை இழந்து தவிப்பதாகவும் இதில் இதுவரை 10 பேர் இறந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சில மாவட்டங்கள் முற்றாக இஸ்தம் பித நிலை அடைந்துள்ளதாகவும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவதாகவும் இராணுவமும் இராணுவத்துணைப்படையும் மீட்புப் பணியில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பலஇடங்களில் மண் சரிவுகள் ஏற்பட்டதில் பாதைகள் மூடப்பட்டிருப்பதாகவும் நெடுந்தூர ரெயில் சேவை குறிப்பாக கல்கத்தா அக்கிரா சேவைகள் உட்படபல சேவைகள் ரத்து செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மாநில அரசு நிவாரணப் பணிகளையும் மீட்புப்பணிகளையும் வேகமாகச் செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [து]

## உலக எண்ணெய் விலை அதிகரிப்பு இந்திய அரசிற்கே வேட்டுவைக்கும்

(புதுடில்லி)
உலகளாவிய எண்ணெய் விலை உயர்வு இந்திய அரசையே ஆட்டம் காணும் அளவுக்கு அங்கு பாதிப்புகளை ஏற்படுத்தலாம் என அரசியல் நோக்கர்கள் ஆரூடம் தெரிவித்துள்ளனர்.

உலக சந்தையில் எண்ணெய் விலை அதிகரித்துள்ள நிலையில் இந்தியாவும் தனது உள்ளூர் சந்தைகளில் எண்ணெய் விலைகளை அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையானது, ஏற்கனவே விரும்பத்தகாத அளவு பணவீக்கம் அதிகரித்துள்ள இந்தியப் பொருளாதாரத்தில் மேலும் பணவீக்கம் அதிகரிக்க வழி கோலும்.

இவ்வாறு பணவீக்கம், அதிகரிக்கும் பட்சத்தில் அரசின்மீது பொதுமக்களுக்கு இருக்கின்ற நம்பிக்கை குறைவடைந்து வெறுப்பு மேலோங்கும் நிலை ஏற்படலாம் என அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க, எண்ணெய் விலை உயர்வினைக் கண்டித்து இந்தியாவின் சில பாகங்களில் ஆர்ப்பாட்டமும் கண்டனப் பேரணிகளும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலை மேலும் பல இடங்களுக்கும் பரவலாம் எனவும் நம்பப்படுகிறது. (உ)

## கடத்தப்பட்ட கியூபாவிமானம் புளோரிடா கடற் பகுதியில் வீழ்ந்தது

(வாஷிங்டன்)
புளோரிடா நீர்ச்சந்தியில் 18 பேரைக் கடத்திச் சென்ற கியூபாவிமானம் விழுந்து நொருங்கியதில் உயிர்தப்பிய 9 பேரை கப்பலில் வந்தோர் காப்பாற்றினர்.

ரஷ்யதயாரிப்பான அன்ரனா ஏ2/ரக விமானம் கியூபாவிலிருந்து அமெரிக்கா நோக்கிச்சென்று கொண்டிருக்கையில் மேற்குக் கியூபாவில் 18 பேருடன் கடத்திச் செல்லப்பட்டது.

குறிப்பிட்ட விமானமே நீர்ச்சந்தியில் விழுந்தவேளை அந்தநீர் பகுதியில் சென்று கொண்டிருந்த வர்த்தகக் கப்பலில் சென்றோர் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த 9 பேரைக் காப்பாற்றினர்.

இதேவேளை ஒருவரின்சடலமும் மீட்கப்பட்டுள்ளது.

தப்பியவர்களில் கடத்தல்காரர்கள் இருக்கிறார்களா? யார் இதற்கு தூண்டுகோல் என்பவற்றை ஆராய்ந்து வருவதாக அமெரிக்காவிலிருந்து வரும் செய்தியொன்று தெரிவிக்கிறது. (து)

## அரச செலவில் சிலைவைக்கத்தடை

(புதுடில்லி)
மறைந்த அரசியல் தலைவர்களுக்கு அரசு செலவில் இனிமேல் சமாதி அமைக்கவோ சிலைகள் எழுப்பவோ முடியாதபடி அரசு தடை விதித்துள்ளது.

புதுடில்லி மத்திய அமைச்சரவையின் முடிவின்படி இனிமேல் மேற்கண்டவற்றிற்கு அரசு நிதி பயன்படுத்தப்பட மாட்டாது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அரசியல்தலைவர் வாழ்ந்த இல்லங்கள் அரசுடமையாக்கப்படா தென்றும் நினைவாலயங்களாக்கப்படா தென்றும் மத்திய அமைச்சர் ஜெகன் போகன் தெரிவித்தார். (து)

## தொடரும் குண்டு வெடிப்புகளுக்கு இந்தியாவே காரணம்

(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தானில் தொடரும் வெடிகுண்டு தாக்குதல்களுக்கு இந்தியாவே காரணம் என, அந்நாட்டு அரசதரப்பு உயரதிகாரிகள் திட்டவட்டமாக கூறிவருகின்றனர்.

அண்மையில் லாகூரில் இடம்பெற்ற, பெரும் உயிரிழப்புகளுக்கு காரணமான வெடிகுண்டு விபத்துடன் தொடர்புடையோர் என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டவர்களின் வாக்குமூலம் இதனை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

தமக்கு வேண்டிய பயிற்சிகளையும் ஆயுதங்களையும் வழங்கி பாகிஸ்தானின் முக்கிய நகரங்களில் குண்டுகளை வெடிக்கவைக்குமாறு இந்திய உளவுத்துறை அதிகாரிகளே தம்மை ஏவிவிட்டதாக, மேற்படி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட எண்மரும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பாகிஸ்தானில் பலகாலமாகவே உயிரிழப்பினை ஏற்படுத்தவல்ல குண்டுவெடிப்புகள் நிகழ்ந்து வருகின்ற போதிலும், கடந்த ஒரு வருடத்தின் முன், தற்போதைய இராணுவ ஆட்சியாளர் பெர்வேஸ்முஷாரப் ஆட்சிப்பொறுப்பை ஏற்றபின் இடம்பெற்ற பல்வேறுகுண்டு வெடிப்புகளில் 100பேர்வரை கொல்லப்பட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ)

### செய்திப்பரல்

★ உலக நாடுகளில் பெற்றோலிய விலைகள் சரிந்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன

★ தி.மு.க. வுக்கும் தமிழ் மாநில காங்கிரஸுக்கும் எந்தவித தேர்தல் உடன்பாடும் ஏற்பட மாட்டாது என்று முதல்வர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

★ இந்திய மத்திய அமைச்சர்கள் சிலர் மீது அளவுக்கு மிஞ்சி சொத்துச் சேர்த்த புகார்களுக்கு தக்க அறிக்கையை அரசு வெளியிடவேண்டும் என்று நீதிமன்று அறிவித்துள்ளது.

★ திருச்சியிலுள் கிராமமொன்றில் உள்ள நாகர் கோவில் 11 சிலைகள் களவாடப்பட்டுள்ளன.

★ பாகிஸ்தானில் நேற்று வெடித்த குண்டினை வைத்தது தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். [து]

## நிராயுத பாணிகளை கொல்லும் ஐவரிக்கோஸ்ற் ஆட்சியாளர்

(லண்டன்)
ஐவரிக்கோஸ்ற் ஆட்சியாளர்கள், நிராயுதபாணிகளான ஊடகவியலாளர்களையும் சட்டவாளர்களையும் விசாரணை என்ற பெயரில் அழைத்துச் சென்று சுட்டுக்கொன்று வருவதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

கடந்தமே மாதம் ஐவரிக்கோஸ்ற் சென்ற சர்வதேச மன்னிப்புச்சபையினர் தாம் அங்கு கண்டு, கேட்ட உண்மைச்சம்பவங்களின் அடிப்படையில் தயாரித்த அறிக்கையிலேயே மேற்படி உண்மை, உலகிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

அங்கு நடைபெறும் வன்செயல்கள் மற்றும் கொலைச் சம்பவங்களுக்கு காரணமானவர்களை இனம்கண்டு சட்டத்தின் முன்னால் நிறுத்தாவிட்டால், இவ்வாறான சம்பவங்கள் அங்கு மேலும் தொடரும் எனவும் அவ் அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், ஜனநாயக ஆட்சி நிலவிவந்த ஐவரிக்கோஸ்ற்றில், கடந்த கிறிஸ்மஸ் காலத்தின் போது, தற்போதைய இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் றொபேட் குவே தலைமையிலான குழு நடத்திய சதிப்புரட்சியின் பின் சர்வாதிகார ஆட்சி நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. (உ)

யன்னலூடாக,

## வீதியில் குப்பைகொட்டிய சிங்கப்பூர் பெண்ணின் வீடு, அரசினால் பறிமுதல்

(சிங்கப்பூர்)
வீட்டுயன்னல் வழியாக வீதிகளில் குப்பைகொட்டுவோர் தொடர்பாக சிங்கப்பூர்அரசு கடுமையான சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.

இதற்கமைய, மாடிவீட்டின் யன்னலூடாக இரு ஓடுகளையும் இரு பூச்சாடிகளையும் எறியமுற்பட்டமைக்காக 47 வயதுடைய பெண்மணி ஒருவருக்கு அரசினால் வழங்கப்பட்ட மாடிவீடு பறிமுதல்செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், 3 மாத சிறைத் தண்டனையும் இக்குற்றத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

இதேசமயம், சிங்கப்பூரில் வாழும் 40 இலட்சம் மக்களில் 90 வீதமானோர் மாடிவீடுகளில் வாழ்பவர்கள்என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## இனப்பிரச்சினை தீர்வு முயற்சியில் அரசாங்கம் தொடர்ந்து ஈடுபடும்
### அமைச்சர் கதிர்காமர் தெரிவிப்பு

(ஒட்டாவா)
இனப்பிரச்சினைக்குஅமைதியான முறையில் தீர்வுகாணும் முயற்சியில் தொடர்ந்தும் அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது. என வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கனடாவில் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் சம்பந்தமான சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிதி சேகரிப்பது தொடர்பாக கனடா கடைப்பிடித்து வரும் சட்டதிட்டங்களில் மாற்றம் கொண்டுவரப்படுவது அவசியம் எனவும் இம்மாநாட்டில் அவர் கனடா அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இதேசமயம் சிறுவர் புனர்வாழ்வுத்திட்டத்திற்கு உதவி வழங்குவது தொடர்பாக கதிர்காமர் விடுத்த கோரிக்கை பற்றியும் இம்மாநாட்டில் பரிசீலிக்கப்பட்டது. (க-உ)




த. சுபத்திரன்
(றொபேட்)

03

மானிட விடியலுக்காகவும்
மகத்தான சமாதானத்திற்காகவும்
வாக்களிப்போம்!

தமிழரின் விடிவுக்கு வரதரின் சின்னம்

சுயேச்சைக்குழு -2 X



அ. வரதராஜப் பெருமாள்

01

(ஈ. பி. ஆர். எல்.எ.ப்)

தீப்பால தான்பிறர்கண்
செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல் வேண்டா
தான்
- குறள் -

# வலம்புரி

## உடன் களைந்தெறிக

தமிழன் படுகின்ற துன்பதுயரங்கள் போதாதென்று அவர்கள் ஈன்றெடுத்த மூத்தாய்ப்பான முதல்களுக்குமா சோதனை, வேதனை. இன்னுமா விந்தனை வேடர்கள் இருக்கிறார்கள். யாழ் மருத்துவ பீடமாணவர்கள் மாண்பொடு விளங்க ராக்கிங் என்ற அநாகரிக செயலை மறந்தனர் என்ற போது மகிழ்ந்தனர் பெற்றோர். இறக்குமதி செய்யப்பட்ட இந்தச் சரக்கை சான்றோராக வருபவர்கள், நாட்டின் நல்லவர்களாய் நலன்காக்க வேண்டியவர்கள் சமூக கவிழுமியங்களை பேண வேண்டியவர்கள், புத்தி பேதலிக்கலாமா? இக்கேவலமான பட்டும் பட்டும் மன, உடல் உபாதைகளை ஏன் மரணத்தையே ஏற்படுத்தும் ராக்கிங் உடனடியாகக்களைந்தெறியப்படவேண்டும்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் குரங்குச் சேட்டைக்கு கிடைத்த தண்டனைபோல் ஏனைய பல்கலைக் கழகங்களும் தண்டனை கொடுக்க வேண்டும். எத்தனை மரணங்கள் கடந்த காலங்களில் நிகழ்ந்துள்ளன. எத்தனை அநாகரிகச் சேட்டைகள் நிகழ்ந்துள்ளன. யார் யாருக்குப்பயப்படுகிறார்கள் தெரியவில்லை. அத்தகைய இராட்சத குணத்தினரை மனிதம் புலராத மரக்கட்டைகளுக்கு ஒரு பட்டமா? காற்றிலே அவர்கள் மானம் பறக்கவிட்ட மொருகேடா? இத்தகைய மிருகங்களுக்கு பல்கலைப்பக்கம் பார்க்காது நீக்குவதே தக்க தண்டனை போல் தெரிகிறது.

கல்வி என்பது அறியாமையைக்கல்லுதல். இந்த அறிவிலிகள் மனனம் செய்தமா நீசர்களா? அல்லது கற்றவர்களா? அன்றிக் கற்க முனைபவர்களா? இவர்களின் வளர்ச்சி யாருக்கு வேண்டும். இவர்களா சமூக நலன்பேணும் பெரியோர்கள். நாளைய மன்னர்களாகப் போபவர்கள். பேய் அரசாண்டால் பிணந்தின்னும் சாத்திரங்கள் என்பதுபோலநாடுநலிவுற்று நாற்றமெடுக்குமே?

பல்கலையும் பயிலிடமாய் பல்கலைக் கழகம் இருந்தால் நற்கலைகளை நாடித் தேடிக்கற்கட்டும். உடன் பிறப்புக்களுடன் பிறவா மிருகங்களுக்கு மனித மாண்பற்றவர்க்கு அங்கு இடமிருக்கக் கூடாது.

அன்புடன் ஆசிரியர்

# இலங்கையின் தற்போதைய அதிகரித்த செலவிற்கு நிறைவேற்றுஜனாதிபதி ஆட்சிமுறையேகாரணம்

(கொழும்பு)

இலங்கையில் தற்போது நாளொன்றுக்குஒரு கோடியே 90 இலட்சம் ரூபா செலவிடப்படுவதற்கு நடைமுறையில் உள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையே காரணமாகும்.

இவ்வாறு குற்றம்சாட்டும் வகையிலான கடிதம் ஒன்றினை ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க ஜனாதிபதிகு அனுப்பி வைத்துள்ளார்.

மேற்படி பெருந்தொகை நிதி, பொது மக்களின் வரிப்பணம் மூலம் அறவிடப்பட்டு வீண் விரயம் செய்வது குறித்தும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், இவ் வருடம் ஜனாதிபதி செயலகத்தால் ஒதுக்கப்பட்ட 700 கோடி ரூபா நிதியில், உரம்வாங்கி மானிய அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கியிருந்தால் விவசாயம் துரித வளர்ச்சி கண்டிருக்கும்.

யுத்தத்திற்காக வீணே செலவிடப்படும் பெரும் தொகைப் பணத்தினை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்தியிருக்கலாம். இது போன்றபல குற்றச்சாட்டுக்களும் ஜனாதிபதி மீது அக்கடிதத்தில் சுமத்தப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, இவ் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை. 1977 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 14 இல் ஐக்கிய தேசியக்கட்சி அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டு 1978 பெப்ரவரி 4 ஆம் திகதி அமுலுக்கு கொண்டுவரப்பட்டது.

இவ் அமைச்சரவையில் ரணில் விக்கிரமசிங்க இளைஞர் விவகார அமைச்சர் மற்றும் பிரதமர் பதவி வகித்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேசமயம்தான் ஆட்சிக்கு வந்தால் நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கப் போவதாக ரணில் கூறிவருகின்ற போதிலும் இது உடனடியாக சாத்தியமாகக் கூடிய ஒன்று அல்ல என்றும் இது வெறும்தேர்தல் பிரச்சாரம் என்றே அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

(க-உ)

# தேர்தலில் வாக்களிக்கும் சூழ் நிலை நிச்சயம் ஏற்படுத்தப்படும்

## யாழ். இராணுவத் தளபதி தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

வடபகுதி மக்கள் அச்சம் பயம் இல்லாமல் தேர்தலில் வாக்களிக்கும் சூழ்நிலை உருவாக்கப்படும் என யாழ். இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா உறுதியளித்துள்ளார்.

யாழ்ப்பாண இராணுவத் தலைமையகத்தில் இடம் பெற்ற உள்ளூர் மற்றும் வெளியூர் செய்தியாளர்களுடனான சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்தார்.

அச்சந்திப்பில் அவர்மேலும் கூறுகையில்,

தேர்தல் ஆணையாளர் பொலிஸ் உத்தியோகத்தர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் தேர்தல் காலத்தில் யாழ்ப்பாணத்தில் மேலும் பாதுகாப்பு அதிகரிக்கப்படும் வாக்களிப்பு நிலையங்களுக்கு ஆயுதங்களுடன்செல்ல எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றார்.

அண்மைக் காலங்களில் மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கைகள் பூரண வெற்றியளித்திருப்பதுடன் 90 வீதமான பிரதேசங்கள் படையினர் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளில் படைத்தரப்பில் 12 உயர் அதிகாரிகள் மற்றும் 167 படையினர் உயிரிழந்துள்ளனர்.

48 அதிகாரிகளும் 882வீரர்களும் காயமடைந்துள்ளனர் இவர்களில் 380 பேர் சிறிய காயங்களுக்கு ஆளாகியுள்ளனர் என்று கூறினார்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் இரகசியத் தொடர்புகள் மூலம் அவர்கள் தரப்பில் 477 பேர் கொல்லப்பட்டும் 448 பேர்காயமடைந்தும் உள்ளமை தெரியவந்துள்ளது என்றார்.

சாவகச்சேரி கொழும்புத்துறை பகுதிகள் படையினரால் மீட்கப்பட்டமையையும் இச்சந்திப்பில் இராணுவத் தளபதி உறுதிப்படுத்தினார்.

[உ]

# தடைப்பட்ட பிரச்சாரப்பணி மீண்டும் ஆரம்பமாகியது

[மட்டக்களப்பு]

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமானஎம். எச். எம். அஷ்ரப்பின் மறைவையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் இடை நிறுத்தப்பட்டிருந்த பொதுத் தேர்தல் பிரச்சாரப் பணிகளை செவ்வாய் மாலை முதல் மீண்டும் ஆரம்பித்துள்ளது.

கொழும்பில் கட்சியின்புதிய தலைவரைத் தெரிவு செய்வதற்காக தங்கியிருந்த பிரதியமைச்சரும், தேசியஐக்கியமுன்னணியின் சிரேஷ்ட உதவி தலைவருமான எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் மட்டக்களப்பு திரும்பியதையடுத்து மேற்படி கட்சியின் தேர்தல் பிரச் சாரப்பணிகள் ஆரம்மாகியுள்ளன.

தலைவரின் மறைவின் பின்னர் கட்சியின் முதலாவது பிரச்சாரக்கூட்டம் காத்தான்குடி கலாசார நிலையத்தில் நடை பெற்றது. [க-60]

# குருவிச்சை சிறைச்சாலையிலிருந்து தப்பியோடிய ஏழுபேர் கைது

(கொழும்பு)

இரத்தினபுரியில் அமைந்துள்ள குருவிச்சை சிறைச்சாலையில் இருந்து நேற்று முன்தினம் காலை தப்பியோடியவர்களில் 7பேர்கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீதி 3பேரையும் தேடிக் கண்டு பிடிக்கும் பணியில் குருவிச்சைப் பகுதிப்பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

சோதனைச் சாவடிகளில் லாவகமாகத்தப்பிய நிலையில் லொறிஒன்றினுள்மறைந்திருந்தபோதே மேற்படி ஏழு கைதிகளும் மீளவும் கைது செய்யப் பட்டுள்ளனர்.

(உ)

# வடக்கு-கிழக்கு வைத்தியர்களுக்கு இடர்கால கொடுப்பனவிற்கென 28 மில்லியன்ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் உள்ள அரச மருத்துவமனைகளில் பணிபுரியும் வைத்திய அதிகாரிகளுக்கு இடர்கால கொடுப்பனவு வழங்குவதற்கென 28 மில்லியன் ரூபா நிதிஒதுக்கப்பட்டுள்ளது.

சுகாதார சுதேசிய வைத்தியத்துறைஅமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா மேற்படி நிதிஒதுக்கீட்டினை அறிவித்துள்ளார்.

இதேசமயம்,

அரச உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் ஆயிரம்ரூபா இடர்கால கொடுப்பனவு வழங்குவதென அரசு இரு கட்டங்களாக அறிவித்திருந்தமை தெரிந்ததே. (க)



## சாயி அருளமுதம்

### தம்யதம், தானம், தயை

மனிதனிடம்தெய்வத்துவம், மனிதத்துவம், அசுரத்துவம் ஆகியவற்றின் குணங்கள் குடி கொண்டிருக்கின்றன.

அசுரத்தன்மைதன்னைவிட்டு விலகுவதற்கு மனிதன், சீவராசிகள் அனைத்திடமும் தயை(கருணை) கொள்ளும் நல்லியல்பைவளர்த்துக் கொள்ளவேண்டும். மனிதத்தன்மைமறைந்து தெய்வத்தை அடைவதற்கு, தானம்செய்வதை-மனம்உவந்து வழங்கும்நல்லியல்பை- கொள்ளவர்த்துக் வேண்டும். தெய்வத்தன்மைகள் வளர்ந்து. கடவுளை அடைய வேண்டுமானால், அவன் தம்யத [புலனடக்கம்]த்தை இடைவிடாது கடைப்பிடிக்க வேண்டும்.

பாபா

# இராசி பலன்

21/ 09 / 2000
(பூரட்டாதி 5, வியாழன்)
அட்டமி பி.ப. 4.45வரை
மிருக சீரிடம்
மு.ப. 10 17 வரை
இராகுகாலம்
1.32-3.02
சுபநேரம்
7.32-9.02
மத்தியாஸ்டமி

**மேடம்**
சகோதரர் உதவி, பணவரவு, நினைத்த காரியம் கைகூடும், குடும்ப சுகம்

**இடபம்**
வாக்குக் கலகம், காரியத் தாமதம், உஷ்ணரோகம்

**மிதுனம்**
தெளிவான சிந்தனை, சென்றஇடத்தில்செல்வாக்கு, பிரயாணம், பணவரவு

**கடகம்**
அலைச்சல், சயன சுகக் குறைவு, காரிய நன்மை, வியாதி

**சிங்கம்**
நினைத்தகாரியம்கைகூடும் குடும்பசுகம், பணவரவு

**கன்னி**
பணச்செலவு, துக்கமான செய்தி, தொழிலில் அதிகாரம்

**துலாம்**
காரியத் தாமதம். உறவினர் வரவு, வீண்பயம்

**விருச்சிகம்**
நண்பர்கள் விரோதம், பிரயாணபயம், கெட்டபெயர்

**தனுசு**
நண்பர்களுடன் உல்லாசம், போசன சுகம், பிரயாணம், காரிய ஜெயம்

**மகரம்**
சந்தோச மிகுதி, தொழில் முயற்சி விருத்தி, தீர்மானத்தில் மாற்றம்

**கும்பம்**
ரோசம், மனக்கிலேசம், புத்திரர்களால் கவலை

**மீனம்**
உறவினர்கள் நம்பிக்கையின்மை, காரிய வெற்றி, வாகன சுகம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# சீரடிபாபா சரித்திரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பகவான் ஸ்ரீசத்ய சாயிசேவா நிலையத்தில் இன்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 27ம் திகதி புதன்கிழமை வரையும் சீரடி பாபாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு சீரடி பாபாவின் சரித்திரம் வாசிக்கப்படவுள்ளது.

இறுதி நாள் நண்பகல்நாராயண சேவையுடன் நிறைவு பெறவுள்ளது. (செ)

# அமைச்சர் வேண்டுகோள்

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர் பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்கென, ஜனாதிபதி குழுவை நியமித்திருப்பதால், போராட்டத்தைக் கைவிட்டு அனைவரும் வேலைக்குத்திரும்பவேண்டும் என அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ)

## 27ஆவது ஒலிம்பிக் போட்டி

# ஒலிம்பிக் பதக்கங்களை இதுவரை 48 நாடுகள் பெற்றுள்ளன

## முதலிடத்தில் அமெரிக்கா

(அவுஸ்திரேலியா)

அவுஸ்திரேலியா தலைநகர் சிட்னியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒலிம்பிக் போட்டியின் 5ஆவது நாளான நேற்று அமெரிக்கா 10தங்கம், 7வெள்ளி, 6வெண்கலம் என 23 பதக்கங்களைப் பெற்று முன்னணி வகிக்கிறது.

இதேவேளை அவுஸ்திரேலியா 7தங்கம், 8வெள்ளி 7வெண்கலம் என 22பதக்கங்களைப் பெற்று 2 ஆவது இடத்தினையும், பிரான்ஸ் 6தங்கம், 7வெள்ளி, 3வெண்கலப் பதக்கங்களைப் பெற்று 8ஆவது இடத்தினையும் வகிக்கிறது.

அத்துடன் சீனா 6தங்கம், 4வெள்ளி 7வெண்கலப் பதக்கங்களுடன் 4 ஆவது இடத்தினை வகிக்கிறது.

நெதர்லாந்து, இத்தாலி, ரஷ்யா, ஜேர்மனி, ஜப்பான், பல்கேரியா என்பன பதக்கங்களின்பட்டியலில்அடுத்த ஆறு இடங்களையும் வகிக்கின்றன இதுவரை 48நாடுகள் பட்டியலில் இடம் பிடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (4)

# அரசியலில் ஈடுபடும் நோக்கம் இல்லை அஷ்ரப்பின்மகன் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியலில் ஈடுபடும் எண்ணம் தனக்கு அறவே கிடையாது என காலஞ்சென்ற அமைச்சர் அஷ்ரப்பின் மகன் தெரிவித்துள்ளார்.

தனது தாய்க்கு உதவியாக பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டேனே தவிர அரசியலில் ஈடுபடும்எண்ணம் தனக்குக் கிடையாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அஷ்ரப்பின் அமைச்சர் பதவியை பொறுப்பேற்குமாறு ஜனாதிபதி தன்னைக் கேட்டதாகவும் தான் அதை விரும்பவில்லைஎனவும் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார். (ந)

### யுத்த...

அங்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடினர்.

இதன் போது யுத்தம் உடன் நிறுத்தப்பட்டு சமாதனம் மலர வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் இவர்களிடம் தெரிவித்தனர். (வ)

### அதிபர்...

தில் பாடசாலையின் அதிபர் அபேயசிங்கா பலமாக அடித்ததனால்மாணவனின் இடது காது கேட்கும் சக்தியை இழந்தது.

இதற்கு நட்டஈடாக குறித்த அதிபர் 10 இலட்சம் ரூபா தரவேண்டுமெனக் கோரியே மாணவன் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளான்.

இது தொடர்பான விசாரணை நவம்பர் மாதம் 10ந் திகதி நடைபெறவுள்ளது. (ந)

### சென்னை...

சேர்ந்த பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களும், பல்கலைக்கழகத் தரத்தையடைந்த நிறுவனங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் தலைவர்களும் இம் மாநாட்டில் கலந்து கொள்வார்கள்.

பழைய கல்வித் திட்டம், நிர்வாக அமைப்பு, உயர் கல்விக்கு நிதி பெறுதல் போன்ற பல் வேறு விடயங்கள் இம் மாநாட்டில்ஆராயப்படவுள்ளது. (ந)


## உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் ஏற்றுவோர் கவனத்திற்கு

சில தினங்களில் உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் ஹெந்தல (HENDALA) கப்பல் மூலம் ஏற்ற இருப்பதால் வாடிக்கையாளர்கள் தொடர்பு கொள்ளவும்.

ஓரிரு தினங்களில் Mitsui (மிற்சுயி) Atlas (அட்லஸ்) சீமெந்து விற்பனைக்கு வர இருப்பதால் ஓடர்களை பதிவு செய்து கொள்ளவும்.

ஜெசிபா ஏஜென்சி
132, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

T. P. 2407. (இ-805)


# சிஹல உறுமய, ஜே. வி. பி கட்சிகள் இனவாதத்தைத் தூண்டுகின்றன

## கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின சாடல்

(கொழும்பு)

இனவாத யுத்தத்தை நிறுத்தி சகல சமூகத்தினரும் ஒற்றுமையுடன் வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்கும் தலைமைத்துவமே நாட்டிற்குத் தேவை என நவசமசமாஜக் கட்சியின் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்தின தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சிறுபான்மை இனமக்களின் நலன்களைக் கருத்திற் கொள்ளாத தலைவர்களால் தான் நாடு பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்கியுள்ளது.

சிஹல உறுமய மக்கள் விடுதலை முன்னணி போன்ற கட்சிகள் இனவாதப் போக்கினைக் கடைப்பிடித்து தேர்தலில் போட்டியிடுகின்றனவே தவிர மக்களின் நலன்களைக் கவனிக்கக் கூடியவாறு எதுவும் செய்யவில்லை என்று கருணாரத்தின மேலும் தெரிவித்துள்ளார். (ந-4)

### புலிகள்...

பூநகரி

★ அமரச்செல்வி / சுதாமதி (நடராசா இந்திரா தேவி) யாழ். மாவட்டம்

★ றஞ்சா / நிலவரசி (பெரியண்ணன் ஜெயமேரி) மன்னார் மாவட்டம்

★ மணிமொழி (தேவநாயகம் பத்மாவதி) யாழ்.மாவட்டம்

★ புலியூர் மைந்தன் (ராகவன் கஜேந்திரன்) யாழ். மாவட்டம்

ஆகிய போராளிகளும் கடந்த 19 ஆம் திகதி பளைப் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில்

★ சந்திரகுமார் (கோபால் கோபிநாத்) கிளிநொச்சி மாவட்டம்

★ மேஜர் முடியரசன் (நாகமணி யோகேஸ்வரன்) மட்டக்களப்பு மாவட்டம்

ஆகிய போராளிகளும் தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

### ஜனாதிபதி...

செலவிடப்படும் பல கோடிக் கணக்கான ரூபாய்களை இம்மாளிகை கட்டப்படுவதை நிறுத்துவதன் மூலம் மிச்சம் பிடித்து அதனை அத்தியாவசிய தேவைகளுக்கு நாம் செலவு செய்வோம்.

தற்போது எமது நாட்டில் ஆறு வயதுக்குக் குறைந்த பிள்ளைகளில் 50 வீதமானவர்கள் போஷாக்கின்மையால் கஷ்டப்படுகிறார்கள் இவர்களது அத்தியாவசிய தேவைகளை நாம் பூர்த்தி செய்வோம்.

நாட்டில் 25ரூபா விற்ற பருப்பு தற்போது 50ரூபாவிற்கு விற்கப்படுகிறது. நிறைவேற்று ஜனாதிபதிக்கு செலவு செய்யப்படும் பல கோடிகணக்கான ரூபாக்களினால் நாட்டின் பொருளாதாரம் சீரழிக்கப்படுகிறது நாம் ஆட்சிக்கு வந்ததும் இத்தகைய பொருளாதார சீரழிவிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவோம் என்றும் கூறினார். (வ)

# 32 நோயாளர்களும் 117 தபால்பொதிகளும் வந்தன

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க நோயாளர் கப்பல் மூலம் கொழும்பிலிருந்து நேற்று 32 நோயாளர் பருத்தித்துறைக்கு அழைத்துவரப் பட்டுள்ளனர்.

அத்துடன் குடா நாட்டுக்கான வெளியூர் தபால் பொதிகள் 117உம் எடுத்து வரப்பட்டுள்ளது.

இக்கப்பலில் யாழ். குடா நாட்டு வைத்தியசாலைக்கான அத்தியாவசிய மருந்துப் பொருட்களும் எடுத்து வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று எடுத்து வரப்பட்ட தபால் பொதிகள் இன்று தரம்பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுமெனவும் தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ-3-12)

# கூட்டணியின் அம்பாறை மாவட்ட வேட்புமனு நிராகரிக்கப்பட்டது

தமிழர் விடுதலைக் கூட்டணியின் திகாமடுல்லமாவட்ட வேட்பு மனுவை மேன் முறையீட்டுநீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் திகாமடுல்ல வேட்பு மனுவில் கட்சி செயலாளரின் கையொப்பம் முறையாக உறுதிப்படுத்தப்படாததனால் அதனை நிராகரிக்க கோரி தமிழர் மகாசபையின் அம்பாறை மாவட்ட முதன்மை வேட்பாளர் எஸ். கோபாலகிருஸ்ணன் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத் தாக்கல் கொடுத்திருந்தார்.

இதனை நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிபதி அசோகா டிசில்வா வேட்பு மனுவை நிராகரித்து தீர்ப்பு வழங்கினார். (க)

### காலி,...

இவர்களில் ஒரு சிறுவனின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணமாக குடும்பம் ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபாவை வழங்குமாறு சமூக சேவை அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

இந்த வெள்ளப் பெருக்கினால் சகலவிதமான போக்குவரத்துக்களும் துண்டிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்தும் பலத்த மழை பெய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### கொழும்பு...

தனது செய்தியில் தெரிவித்துள்ளது.

பத்திரிகையாளர்கள் அனைவரும் நேற்றைய தினமே கொழும்பு திரும்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### யாழ்ப்பாண...

மக்கள் தமது வாக்குகளை எவ்வித அச்சமுமின்றி செலுத்துவதற்குரிய அமைதிச் சூழ்நிலை விரைவில் உருவாக்கப்படும்.

இப்பொழுத் தேர்தலை சுமுகமான முறையில் நடத்துவதற்கு தேர்தல் ஆணையாளரும், பொலிஸாரும் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றார்கள்.

வாக்களிப்பு நிலையங்களில் எவரும் ஆயுதங்களுடன் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் தேர்தல் காலத்தில் கூடியளவு பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (வ)


ஸ்ரீ செல்வா
[யாழ்ப்பாணம்]
ரஜனி, அம்பிகா, ராதா
நடித்த
எங்கேயோ கேட்ட குரல்
10.30-2.00பழைய நேரம்
(இ-688)



பிணங்கள் சரியும் நம் தெருக்கள்
யுத்த வடுக்களைச் சுமக்கும்!
வடுக்கள் சுமந்து குனிந்த நம் தேசம்
யுத்தத்தை வெறுக்கும்!
என்றோ ஒரு நாள்நிமிரும்!!
என்றும் அதற்காகவே ஈ. பி. டி. பி!
உங்கள் வாக்கு வீணைச் சின்னத்திற்கே!

(ஈ. பி. டி. பி)

வீணையே உங்கள் இன்னம்! சேவையே எங்கள் எண்ணம்!



X

(இ/736)

கோப்பாய்ப் பிரதேச அபிவிருத்திக்காக ஈ. பி. டி. பியினால் வென்றெடுக்கப்பட்ட கோப்பாய்ப் பிரதேச சபையினால் 6 இலட்சத்து 12 ஆயிரம் ரூபா செலவில் உரும்பிராய்ச் சந்தை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.


இப்பத்திரிகை "வலம்புரி" அச் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.